<u>சுருக்கம்</u>

பொதுப்பணிகள் – கருணை அடிப்படையில் பணிநியமனம் - ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – விழுப்புரம் மாவட்டம் - பணியில் இருக்கும் போது காலமான திரு.திருப்பதியான், ஊராட்சி செயலர் என்பவரின் மகள் செல்வி.தி.பரணி பாரதி, இளநிலை உதவியாளர் பதவியில் பணி நியமனம் – பணிவரன்முறை செய்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

<u>ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (பஅ-5) துறை</u>

**அரசாணை (3ப) எண்.35** **நாள் 03.12.2021.**
**பிலவ, கார்த்திகை 17,**
**திருவள்ளுவர் ஆண்டு 2052.**

<u>படிக்கப்பட்டவை:</u>

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ.1) துறை, நாள்: 23.01.2020.
2. விழுப்புரம் மாவட்ட ஆட்சித் தலைவரின் செயல்முறை ந.க.எண்.பஅ1/6092/2018, நாள்: 17.03.2020.
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடித ந.க.எண்.6038/2021/ டி1, நாள்: 08.09.2021.

----------

<u>**ஆணை:**</u>

பணியில் இருக்கும்போது காலமான அரசுப் பணியாளர்களின் வாரிசுகளுக்குக் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கலாம் என்பதன் அடிப்படையில், விழுப்புரம் மாவட்டம், திருநாவலூர் ஊராட்சி ஒன்றியத்தில், கிள்ளனூர் ஊராட்சி

செயலராகப் பணிபுரிந்து 02.06.2017 அன்று காலமான திரு.திருப்பதியான் என்பவரின் வாரிசுதாரரும் மகளுமான செல்வி.தி.பரணி பாரதி என்பவருக்கு மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட செயல்முறையின்படி கருணை அடிப்படையில், விழுப்புரம் மாவட்டத்தில் இளநிலை உதவியாளராகத் தற்காலிகமாகப் பணிநியமனம் வழங்கப்பட்டு, அத்தனியர் 18.03.2020 முற்பகல் முதல் பணியேற்று பணிபுரிந்து வருவதால், அன்னாரின் பணியை வரன்முறை செய்து ஆணையிடும்படி மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார். மேலும், மறைந்த அரசு ஊழியர் பணிவரன்முறை செய்யப்பட்ட பணியாளர் என்றும், அவரது குடும்பம் வறிய நிலையில் இருந்தது என்றும், அவரது மகள் செல்வி.தி.பரணி பாரதி கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி 27.09.2019 அன்று விண்ணப்பித்தார் என்றும், அவரது பிறந்த தேதி 18.06.2001 என்றும், பணிநியமனம் கோரி விண்ணப்பித்த நாளில் தனியரின் வயது 18 என்றும், அவர் இடைநிலைக் கல்வி பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், அவருக்குப் பணி நியமனம் வழங்குவதற்கு இதர வாரிசுதாரர்கள் ஆட்சேபணை ஏதும் தெரிவிக்கவில்லை என தெரிவித்து, மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அரசுக்கு முன்மொழிவு செய்து அனுப்பியுள்ளார்.

2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் முன்மொழிவு உரிய அசல் ஆவணங்களுடன் அரசால் நன்கு ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வுக்குப்பின், கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கும் திட்டத்தின்படி, மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி கூர்ந்தாய்வு செய்து இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்ட செல்வி.தி.பரணி பாரதி என்பவர் பணி நியமனத்திற்கான அனைத்துத் தகுதிகளையும் பெற்றுள்ளதால், தமிழ்நாடு அமைச்சுப் பணியில், விழுப்புரம் மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் இளநிலை உதவியாளர் பதவியில் 18.03.2020 முற்பகல் முதல் தனியரின் பணியினை அவர் அப்பணியிடத்திற்குரிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. அவ்வாறு பணிவரன்முறை செய்யப்படுவதால், தனியர் ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவை ஏதும் இருப்பின் அவற்றைப் பெற உரிய விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

3. இவ்வாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் 10.11.2021-ஆம் நாளிட்ட அலுவல் சாரா எண்.18272/ட்டி.1/2021-1 மற்றும் மனிதவள மேலாண்மை துறையின் அலுவல் சாரா எண்.35288/ஜி.1/2021-1, நாள்: 25.11.2021-ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

K. கோபால்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை-15.
மாவட்ட ஆட்சித் தலைவர், விழுப்புரம் மாவட்டம்.
செல்வி.தி.பரணி பாரதி, இளநிலை உதவியாளர்,
ஊரக வளர்ச்சிப் பிரிவு, விழுப்புரம் மாவட்டம்.
(வழி: மாவட்ட ஆட்சித் தலைவர், விழுப்புரம் மாவட்டம்.)
மாநிலக் கணக்காயர், சென்னை -18/35.
கருவூல மற்றும் கணக்குத் துறை ஆணையர், சென்னை-15
மாவட்ட கருவூல கணக்கு அலுவலர், விழுப்புரம் மாவட்டம்.

<u>நகல்:</u>
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை-9.
மனிதவள மேலாண்மை துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.